தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk



| | |
|---|---|
| வெளியிடுபவர் | வங்கி மேற்பார்வைத் திணைக்களம் |
| திகதி | 2022.07.20 |

## நிலவுகின்ற அதிவிசேட பேரண்டப் பொருளாதார சூழ்நிலைகளுக்கு மத்தியில் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கான சலுகைகள்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவலுடன் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு உதவுமுகமாக 2020 மாச்சு தொடக்கம் இலங்கை மத்திய வங்கி பல சலுகைத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. சட்டஇசைவு தாமதகாலம், கடன் மறுசீரமைப்பு/ மீள்அட்டவணைப்படுத்தல், கடன் அறவீட்டு நடவடிக்கைகளை இடைநிறுத்துதல், குறைந்த செலவில் மூலதனக் கடன்கள், சில வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்களுக்காக கட்டணங்கள் மற்றும் அறவீடுகளைத் தள்ளுபடி செய்தல் போன்றவற்றை இச்சலுகைகள் உள்ளடக்குகின்றன. தனியார் துறை ஊழியர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அத்துடன் சுற்றுலாத் துறை, போக்குவரத்து, தயாரித்தல், சேவைகள், கமத்தொழில், நிர்மாணம், ஆடை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட ஏற்பாட்டுச்சேவை வழங்குதல் போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள ஏனைய வியாபாரங்கள் உள்ளடங்கலாக தனிப்பட்டவர்களுக்கு இச்சலுகைகள் வழங்கப்பட்டன. அதற்கமைய, கொவிட்-19 மூலம் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட சட்ட இசைவு தாமதகாலத்தின் இறுதிக்கட்டம் 2021.12.31 அன்று முடிவடைந்த அதேவேளை சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்ட கடன் சலுகைக் காலத்தின் இறுதிக்கட்டம் 2022.06.31 அன்று முடிவுற்றது. அதேவேளை, தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கக்கூடிய சாத்தியப்பாட்டைக் கொண்ட வணிகங்களிற்கு புத்துயிரளிக்கம் நோக்குடன், கொவிட்-19 நோய்த்தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட குறை செயற்றிறன் மற்றும் செயற்படா கடன்பெறுநர்களை அடையாளங்காணவும் உதவுமென இலங்கை மத்திய வங்கியானது உரிமம்பெற்ற வங்கிகளில் கொவிட்-19இற்குப் பின்னரான மீளெழுச்சிப் பிரிவுகளை நிறுவுமாறு அறிவுறுத்தியுள்ளதுடன், இதன்மூலம், கடன் சலுகைக் காலப்பகுதியை நிலைபேறான விதத்தில் நிறைவுசெய்ய வசதியளிக்கிறது.

தற்போதைய பேரண்டப் பொருளாதார சவால்களையும் அரசாங்க நிறுவனங்கள் உள்ளடங்கலாக பல ஆர்வலர்களினாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளையும் பரிசீலனையிற்கொண்டு, தற்போதைய பேரண்டப் பொருளாதாரம் காரணமாக அத்துடன்/ அல்லது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காரணமாக வருமானம் அல்லது வியாபாரங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள கடன்பெறுநர்களுக்கு ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக பொருத்தமான சலுகைகளை வழங்குகின்ற அதேவேளை வங்கித்தொழில் துறை உறுதிப்பாட்டின் மீது ஏதேனும் அளவுக்குமீறிய அழுத்தத்தினைத் தடுக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளை இலங்கை மத்திய வங்கி கோரியுள்ளது. தனிப்பட்டவர்களின் எதிர்கால மீள்கொடுப்பனவு இயலளவு மற்றும் வியாபாரங்கள்/ கருத்திட்டங்களின் நீடித்துழைக்கும் தன்மை என்பவற்றைச் சார்ந்து இச்சலுகைகள் விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. சலுகைகளின் முக்கிய அம்சங்கள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன:

அ. **செயற்படும் கொடுகடன் வசதிக்கான சலுகைகள்:** கடன்பெறுநர்கள் பொருத்தமான சலுகைகளை (மூலதனம் அல்லது வட்டி அல்லது மூலதனம் வட்டி இரண்டிற்கும் அல்லது மூலதனம் வட்டியின் ஒரு பாகத்திற்கான சலுகைக் காலங்கள், கொடுகடன் வசதிகளை மறுசீரமைத்தல் அல்லது வேறேதேனும் சலுகை) ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஆ. **செயற்படா கொடுகடன் வசதிக்கான சலுகைகள்:** கடன்பெறுநர்கள் ஏற்கனவேயுள்ள செயற்படா கொடுகடன் வசதிகளை நீண்ட காலப்பகுதிக்கு மீளஅட்டவணைப்படுத்துவதற்கு கோரலாம். மேலும், 2020.01.01ஆம் திகதிக்குப் பின்னர் செயலாற்றமற்றவையாக வகைப்படுத்தப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கெதிரான அறவீட்டு நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் கோரப்பட்டுள்ளன. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அரிசி ஆலைகளுக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இ. எனினும், வேண்டுமென்றே தவணை தவறுதல், கடன் நிதிகளைத் திசை திருப்புதல் காரணமான ஏற்படும் தவணைதவறுதல்கள், கடன் நிதிகளைத் தவறாகப் பயன்படுத்தல், தவறான முகாமைத்துவம்/ அல்லது மோசடி மற்றும் நீடித்துழைக்காத கருத்திட்டங்கள் போன்றவற்றுக்கு இச்சலுகைகள் வழங்கப்படவில்லை.

ஈ. **மீள்கொடுப்பனவுத் திட்டங்கள்:** கிரமமான தவணைக் கொடுப்பனவு கடன்கள் விடயத்தில் புதிய தவணைக் கொடுப்பனவுத் தொகையானது ஏற்கனவேயுள்ள கடனின் ஒப்பந்தச் செய்யப்பட்ட தவணைக் கொடுப்பனவு பெறுமதியை விஞ்சலாகாது. ஏனைய கொடுகடன் வசதிகள் விடயத்தில் உரிமம்பெற்ற வங்கியும் கடன்பெறுநறும் பொருத்தமான மீள்கொடுப்பனவுத் திட்டத்தின் மீது பரஸ்பரம் இணங்கிக்கொள்ள வேண்டும்.

உ. **கடன் சலுகைக் காலப்பகுதி மற்றும் தொகைக்கு ஏற்புடைய வட்டி வீதம்:** ரூபா கொடுகடன் வசதிகள் விடயத்தில் கடன் சலுகைக்காலம் மற்றும் தொகை மீது அறவிடப்படவேண்டிய வட்டிவீதமானது, பிந்திய ஒப்பந்தம் செய்யப்பட்ட வட்டிவீதம் (அதாவது மாறுபடும் வட்டிவீதத்தைக் கொண்ட கடன் வசதி தொடர்பில் 2022.07.07இல் உள்ளவாறு அண்மைய மீளவிலையிடப்பட்ட வட்டி வீதம் அல்லது நிலையான வட்டிக் கடன் வசதிகளைப் பொறுத்தவரையில் கடன்வசதி வழங்கப்படும் போது நிர்ணயிக்கப்பட்ட வட்டி வீதம்) அல்லது நடப்பு துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் (அதாவது 15.5 சதவீதம்), இதில் எது உயர்வானதோ அதனை விஞ்சலாகாது. வெளிநாட்டு நாணய வசதிகள் விடயத்தில் உரிமம்பெற்ற வங்கியும் கடன்பெறுநர்களும் வட்டி வீதத்தின் மீது பரஸ்பரம் இணங்கிக்கொள்ள வேண்டும்.

ஊ. **கடன்களை மேலதிக செலவின்றி முன்கூட்டியே தீர்ப்பனவு செய்வதற்கான வாய்ப்பு:** ஏதேனும் மேலதிகக் கட்டணத்தைச் செலுத்தாது கடன்பெறுநர்கள் தமது கொடுகடன் வசதிகளை முன்கூட்டியே தீர்ப்பனவு செய்வதற்கு அவர்களால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளை விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் பரிசீலனையிற் கொள்ளுமாறு உரிமம்பெற்ற வங்கிகள் வேண்டப்பட்டுள்ளன. குத்தகை வசதிகள் தொடர்பில், எதிர்கால வட்டியினை அறவிடுவது தள்ளுபடி செய்யப்படும். முன்கூட்டியே கடனைத் தீர்ப்பனவு செய்வதற்கான வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள உத்தேசித்துள்ள கடன்பெறுநர்கள் அத்தகைய கோரிக்கைகளை 2022.09.30 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

எ. உரிமம்பெற்ற வங்கிகள், இத்திட்டத்தின் கீழ் தகைமையுடைய கடன்பெறுநர்களிடமிருந்து பெறப்படும் புதிய கடனுக்கான விண்ணப்பத்தினைக் கொடுகடன் தகவல் பணியகத்தின் மோசமான பதிவேடுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நிராகரிக்கக்கூடாது.

**ஏ. சலுகைகளுக்கான கோரிக்கைகள்:** பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்கள் மேற்குறித்த சலுகைகளுக்கு 2022 யூலை 31 அன்று அல்லது அதற்கு முன்னர் எழுத்தில் அல்லது இலத்திரனியல் வாயிலாக விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். உரிய உரிமம்பெற்ற வங்கிகள் தீர்மானம் பற்றி கோரிக்கை கிடைத்த ஒரு மாதத்தினுள் விண்ணப்பதாரிக்கு உரியவாறு அறிவிக்கும். விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிராகரிப்பதற்கான காரணத்தை உரிமம்பெற்ற வங்கிகள் விண்ணப்பதாரிக்கு அறிவிக்க வேண்டும் என்பதுடன் அத்தகைய நிராகரித்தலுக்கெதிராக இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களப் பணிப்பாளருக்கு மேன்முறையீடு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இச்சவாலான காலப்பகுதியில், தனிநபர்கள் மீதான அழுத்தத்தைக் குறைப்பதுடன், தற்போதைய சவால்களை எதிர்கொண்டு பொருளாதார மீட்சிக்க ஆதரவளிக்கக்கூடியதென எதிர்பார்க்கப்படும் வணிகங்களின் நிலைத்திருக்கும் தன்மையை உறுதிசெய்வதற்கும், உரிமம்பெற்ற வங்கிகளும் மற்றும் கடன்பெறுநர்களும் இச்சலுகைகளைச் செயற்படுத்த ஒன்றிணைந்து ஒத்துழைக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கொவிட்-19 மீளெழிச்சிப் பிரிவுகள் மற்றும் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு கிடைக்கக் கூடியதாகவுள்ள சலுகைகள் பற்றிய மேலதிக விபரங்களை முறையே உரிமம்பெற்ற வங்கிகளில் கொவிட்-19 இற்குப் பின்னரான மீளெழுச்சிப் பிரிவுகளை நிறுவுதல் தொடர்பிலான வழிகாட்டல்கள் குறித்த 2022இன் 1ஆம் இலக்கச் சுற்றறிக்கை மற்றும் நிலவுகின்ற அதிவிசேட பேரண்டப் பொருளாதார சூழ்நிலைகளுக்கு மத்தியில் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கான சலுகைகள் குறித்த 2022இன் 2ஆம் இலக்கச் சுற்றறிக்கை என்பவற்றிலிருந்து பெறமுடியும் என்பதுடன், இச்சுற்றறிக்கைகளை பின்வரும் இணைய இணைப்புக்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/bsd_circular_no_1_of_2022_e.pdf

https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/bsd_circular_no_2_of_2022_e.pdf